விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட

ஐயா ஓமந்தூர் ராமசாமி தலைசிறந்த காந்தியவாதி!

பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை

சென்னை, பிப். 2-

"விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட ஐயா ஓமந்தூர் ராமசாமி அவர்கள் தலைசிறந்த காந்தியவாதி" என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் புகழாரம் சூட்டி யுள்ளார்.

விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் முதலமைச்சருமான ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

எளிமையின் உருவம் - விடுதலைப் போராட்ட வீரர் - முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை

உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு என இந்திய விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட தலைசிறந்த காந்தியவாதியும், இந்தியா விடுதலை யடைந்தபோது நம் மாநில முதலமைச்சராக இருந்த பெருமைக்குரியவருமான ஓமந்தூர் ராமசாமி ஐயா அவர்களின் பிறந்தநாள்.

சமூகநீதிச் சாதனையாளராகத் தந்தை பெரியாராலும் பேரறிஞர் அண்ணாவா லும் போற்றப்பட்ட அவருக்குச் சென்னை ஓமந்தூரார் மருத்துவக் கல்வி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள் ளார்.

பழனிசாமியின் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் வீழ்த்தி 2026-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைக்கும்!

சர்வாதிகாரி மோடியிடம் மண்டியிடும் பழனிசாமி சர்வாதிகாரம் பற்றி பேச அருகதையில்லை!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி?

சென்னை, பிப்.2-

2026 தேர்தலில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைத்து, எடப்பாடி பழ னிசாமியின் எதிர்க்கட்சி தலைவர் அந்தஸ்தையும் வீழ்த்தும் மோடி என்ற சர் வாதிகாரியைப் போற்றிக் கொண்டிருக்கும் பழனி சாமி, சர்வாதிகாரி பற்றி யெல்லாம் பாடம் எடுக்க அருகதை இருக்கிறதா? என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச் சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கேள்வி எழுப்பி யுள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:-

உலக சர்வாதிகாரிகள் அத்தனை பேரின் டி. என்.ஏ.வாக இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, ஹிட்லர், முசோலினி, நீரோ போன்றவர்களை எல்லாம் தி.மு.க. ஆட்சி யின் மீது அடைமொழியா கக் காட்டுவது அரசியல் அவலம். வரலாறு தெரிந் தால் பேசுங்கள் பழனி சாமி அவர்களே! இல்லை யென்றால் வழக்கம் போல அடிமைத்தனம்

என்ற விசுவாசத்தை மட்டுமே மோடிக்குக் காட்டிக் கொண்டிருங் கள். ஜெர்மனியின் சர்வா திகாரியான ஹிட்லரை இரண்டாம் உலகப்போ ரின் இறுதியில் வீழ்த்தியது ஸ்டாலினின் செம்படை தான். இந்தச் சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் படை மீண்டும் ஆட்சி அமைத்து, உங்களின் எதிர்கட்சி என்ற அந்தஸ்தையும் வீழ்த்தும். எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் பறிகொடுத்துவிட்டு நிற் கப் போகிறீர்கள்!

தமிழ்நாட்டில் திமுக கூட்டணிதான் வெற்றி பெறும் என்றும் தமிழ் நாட்டில் பெண்களின் பெரும்பான்மையான ஆதரவு திமுகவிற்குத் தான் உள்ளது என்றும் முன்னணி ஊடகங்களில் கருத்துக் கணிப்புகள் வெளியாகி, தமிழ்நாட்டு மக்களின் உணர்வைப் பிர திபலித்துக் கொண்டிருப்ப தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், வெற்றி கிடைக்காவிட்டா லும் பரவாயில்லை, அவ தூறுகளை யாவது அள் ளித் தெளிப்போம் என சூனா பானாவாக கிளம்பி விட்டார் பழனிசாமி!

விரக்தியில் பழனிசாமி!

மீண்டும் திமுக ஆட்சி யைப் பிடிக்கும் என்ற கருத்துக்கணிப்புகளால் விரக்தியில் என்ன செய் வது என்று தெரியாமல் அறிக்கை என்ற பெயரில் கிறுக்கித் தள்ளியிருக்கி றார் பழனிசாமி.

டெல்லியில் சதித்திட் டம் தீட்டி சர்வாதிகார எண்ணத்தோடு தமிழ் நாட்டின் மீது ஏவப்படும் எந்த ஆதிக்கத்தையும் வெற்றியடைய விட மாட்டோம். எந்தக் கொம் பனாலும், தமிழ்நாட்டைத் தலைதாழ்த்தி விட முடி யாது என்பதில் உறுதியா கப் போரடிக் கொண்டிருப் பது திராவிட மாடல் அரசும் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சரும் தான். ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டுக்குச் செய்யும் அநீதிகளுக்கும் அவர்களது தமிழ்ப் பகை நடவடிக் கைகளுக்கும் எதிராக 'தமிழ்நாட்டைத் தலைகு னியவிட மாட்டேன்' என்று சொன்னால் பழனி சாமிக்கு ஏன் எரிகிறது?

டெல்லி ஓனர்களுக்கு அடிமையாக வாழ்வதிலே தனக்கு நிகராக யாரும் வந்துவிடக் கூடாது எனப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் வாழ் நாள் அடிமை பழனிசாமி, சரித்திரப் புத்தகங்கள், சர் வாதிகாரிகள் என்றெல் லாம் நகைச்சுவை செய்து கொண்டிருக்கிறார். ஜனநாயகத்தைச் சீரழித்து இந்த நாட்டையே சர்வா திகார ஆட்சியாக்கிவிடும் நோக்கத்தோடு நாளும் பொழுதும் ஆதிக்கத் திட் டங்களைச் செயல்படுத் துக் கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. மோடி என்ற சர்வாதிகாரி யைப் போற்றிக் கொண்டி ருக்கும் பழனிசாமி, சர்வா திகாரி பற்றியெல்லாம் பாடம் எடுக்க அருகதை இருக்கிறதா?

பொள்ளாச்சி சம்பவம்!

ஒன்றிய அரசின் காலில் விழுந்து, கைகோத்து தமிழ்நாட்டிற்குத் துரோ கம் செய்கின்ற பழனிசா மிக்கு, தமிழ்நாடு முதல மைச்சரைக் குறைகூற எந்த அருகதையும் இல்லை. பொள்ளாச்சி சம் பவத்தை வேடிக்கை பார்த்துவிட்டு இப்பொ ழுது பெண்கள் பாது காப்பு பற்றிப் பேச தகுதி யும் இல்லை. பழனிசாமியின் படுபாதக ஆட்சியில் தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படிப் பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தார் கள்? என்பதற்கு பொள் ளாச்சியே உதாரணம். தமிழ்நாட்டு மக்கள் அந்த அவலங்களை மறந்திருப் பார்கள் என்று நினைத்து பொய்களை அள்ளிவிட் டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் திரா விட மாடல் ஆட்சியில் தான் போதைப் பொருள் களைத் தடுக்க வரலாற்றில் இல்லாத அளவுக்குக் கடு மையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. போதைப் பொருள் கடத் தல், விற்பனையில் ஈடுபடு பவர்கள் அதிரடியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படு கின்றனர். கைது செய்யப் பட்டவர்களை விசாரித்தால் பின்னணியில் இயங்கும் போதைப் பொருள் மாஃபியாக்கள் பற்றிய தக வல்கள் கிடைக்கின்றன. இந்த மாஃபியாக்களோடு தொடர்பில் இருப்பவர்க ளாக அதிமுக நிர்வாகிகள் இருக்கின்றனர். நடிகர்க ளுக்குப் போதைப் பொருள் விநியோகம் செய்த பிரசாத் என்பவ ருக்கு அதிமுக ஐடி விங் பொறுப்பு கொடுத்து அழகு பார்த்துவிட்டு, செய்தி வெளியில் தெரிந்த தும் அவசர அவசரமாக அவரைப் பொறுப்பிலி ருந்து நீக்கிய உத்தமர்தான் பழனிசாமி.

ஏய்ப்பவருக்கே காலம் என்று எண்ணிவிடாதே என எம்.ஜி.ஆரின் பாடலை மேற்கோள் காட்டும் பழனிசாமிக்கு, அதே எம்.ஜி.ஆர் பாடிய அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு? தினம் அச் சப்பட்ட கோழைக்கு இல் லம் எதற்கு? என்ற பாடல் ஏன் நினைவுக்கு வர வில்லை. தமிழ்நாட்டில் திராவிட மாடல் 2.0 ஆட் சிதான் மீண்டும் அமையப் போகிறது. தமிழ்நாட்டில் இனி ஒரு நாளும் பாஜக வின் அடிமை ஆட்சி அமையப் போவதில்லை, பழனிசாமியின் அரசியல் அத்தியாயத்திற்கு 2026 தேர்தலோடு முடிவுரை எழுதப்படப் போகிறது என்கிற உண்மைகள் சுடு வதால் விரக்தியில் பழனி சாமி உதிர்த்து வரும் உள ரல்கள் உண்மையாகி விடாது.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல் வம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மாநகர் முன்னாள் மாவட்ட செயலாளர் கே.தாவூது அவர்களின் பேரன்புதூர் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.சித்திக் அமின் – பவுசியா திருமண வரவேற்பு நிகழ்ச்சி மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில கழக நிர்வாகிகள் பொன்.முத்துராமலிங்கம், பெ. குழந்தைவேலு. வ.வேலுச்சாமி. அக்ரி கணேசன் மற்றும் திரளான இளைஞர் அணியினர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

பேரறிஞர் அண்ணா 57வது நினைவு நாள்!

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை அமைதிப் பேரணி!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு - சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் - சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைசுடரொளி-சொக்கவைக்கும்சொற்பொழிவாளர்-எழுத்துவேந்தர்-தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **57வது** நினைவு நாளினையொட்டி, **மாண்புமிகு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு மற்றும் கழக முன்னணியினர் நாளை (பிப்ரவரி - 3, செவ்வாய்க்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நாளை நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி, மாற்றுத்திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை மாவட்ட தி.மு.க.,

கிராமப்புற மாணவர்களுக்காக

புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

கல்வி உச்சி மாநாட்டில் அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, பிப். 2-

"கிராமப்புற மாணவர்களுக்காக புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறஞர் கலைஞர் அவர்கள்" என்று உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு - 2026ல் பேசும் போது கூறினார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026இல்மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்முனைவர் கோவி. செழியன் அவர்கள் பேசியதாவது :

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் திருவள்ளுவர் அவர்கள் 'கற்க' என கல்வியின் சிறப்பினை இம்மண்ணில் வலியுறுத்தியுள்ளார். இந்த மண்ணில் இந்த உலகளாவிய முதல் கல்வி உச்சி மாநாடு நடத்துவது சிறப்பு.

சிறப்புமிக்க உலகப் பிரதிநிதிகளே, துணை வேந்தர்களே, தொழில் துறைத் தலைவர்களே, புதுமை யாளர்களே, மாணவர்களே மற்றும் நண்பர்களே - வணக்கம். மனித மாண்புக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் கல்விதான் மிகவும் சக்திவாய்ந்த உந்துசக்தி என்பதை நீண்ட காலமாக உணர்ந்துள்ள தமிழ் மண்ணில் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.சென்னையில் UK, இந்தியாதேசிய மாணவர்கள்மற்றும் முன்னாள்மாணவர்சங்கம் (National Indian Students and Alumni Union (NISAU)) உடன் இணைந்து தமிழ் நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026 சிறப்பாக நடைபெற்று வருகிறது.

உயர்கல்வியில் தமிழ்நாடு முன்மாதிரி!

முதலமைச்சர் அவர்களின் 'நான் முதல்வன்', 'புதுமைப் பெண்', 'தமிழ் புதல்வன்' போன்ற சீரிய திட்டங்களினால் இந்தியா விலேயே தமிழ்நாடு தான் உயர்கல்வியில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு', 'இருமொழிக் கொள்கையை கொண்ட தமிழ் நாடு'; இது தான் தமிழ் நாட்டிற்கு பெருமை. அண்ணல் அம்பேத்கர் உயர்கல்வி உதவித் திட்டம் போன்ற திட்டங்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் படிப்புகளைத் தொடர உதவியுள்ளன.

எனவே, இந்த உலகளாவிய கல்வி உச்சி மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறுவது மிகப் பொருத்தமானது. சமூக மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனிதவள உருவாக்கம் ஆகியவற்றில் தமிழ்நாடு நீண்ட காலமாக ஒரு தேசியத் தலைநகரமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் 61க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், கலை, அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை கல்லூரிகளின் பரந்த வலையமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் முன் முயற்சிகளால் உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் (GER) 47%க்கும் மேலாக கணிசமாக உயர்ந்துள்ளது- இது தேசிய சராசரியை விட மிக அதிகம்.

முன்னாள் முதல மைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களுக்காக ஒரு குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவருக்கு 5 சதவீதம் கூடுதல் மதிப்பெண் வழங்கும் புரட்சிகரமான திட்டத்தினை செயல்படுத்தி குடும்பத்தின் முதல் பட்டதாரியை உருவாக்கினார். மேலும், பொறியியல் கல்லூரி நுழைவுத் தேர்வை இரத்து செய்து கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பொறியியல் படிப்புகளில் சேர வழி வகை செய்தார்.

தற்போதைய முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் படிக்கும்போதே தொழில் முனைவோராக பயிற்சிப் பெற 'நான் முதல்வன்' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டு மாணவர்கள் இந்திய மாணவர்களுடன் அல்லாமல் உலக மாணவர்களுக்கு இணையான கல்வித் தரத்தினை கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா போன்ற மேலைநாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்கின்றனர். "கல்வித் தான் அறிவு ஒளியின் உச்சம்" என்ற உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் உயர்கல்விப் படிப்பிற்கு முக்கியத்து வமளித்து வருகிறார்.

தமிழ்நாடு உலகை அழைக்கிறது!

உயர்கல்வித் துறையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாணவர்களும் கல்வி கற்பதை மட்டுமே செய்ய வேண்டும் மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார். நமது முதலமைச்சர் அவர்கள் 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு துணிச்சலான இலக்கை முன்வைத்துள்ளார்.

இந்த இலக்கை வெறும் உள்கட்டமைப்பு மூலம் மட்டும் அடைய முடியாது. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது திறமையான மனிதவளம், முன்னணி ஆராய்ச்சி, புத்தாக்கச் சூழல் அமைப்புகள், உலகளவில் போட்டித்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வாய்ப்புகள் ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே, உயர் கல்வி என்பது ஒரு துணைத் துறை அல்ல, மாறாக டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தின் உந்துசக்தி ஆகும்.

இங்கு கூடியுள்ள அனைத்துப் பிரதிநிதிகளையும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் காண்பதற்கு மட்டுமல்லாமல், கல்வி என்பது பகிரப்பட்ட செழுமையின் அடித்தளமாக மாறுவதற்காக எங்களுடன் பங்காளராக இணையவும் நாங்கள் வரவேற்கிறோம். நீதியுடன் கூடிய வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கம் மற்றும் அனைவருக்கும் வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாதிரியின் உணர்வில், இந்த எதிர்காலத்தை எங்களுடன் இணைந்து உருவாக்க தமிழ்நாடு உலகை அழைக்கிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் பேசினார்.